30 டிசம்பர் 2018

Newbec

NEW WAY OF BEING CHURCH

யேசு, மரி, சூசை திருக்குடும்ப விழா

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

மாதாந்திர கருப்பொருள்:

**கிறிஸ்துவே இன்றியமையாதப் பரிசு (கொடை)**

# நமது வாழ்வில் தூயவரின் நித்திய பிரசன்னம்



இரு நண்பர்கள், தங்களது வீடமைப்புப் பகுதியில் இருக்கும் ஒரு கடைசியில் மத்திய உணவு உட்கொண்டிருந்தனர். அவர்களுடன் கடையின் முதலாளியும் சேர்ந்து கொண்டார். அவர்களது உரையாடல் குடும்பத்தைப் பற்றியதாக அமைந்திருந்தது.

அவர்களில் ஒருவர் மூன்று பிள்ளைகளைப் பெற்றெடுத்த சற்று மூத்தத் தாய். அவர்களின் உரையாடலின் போது அவளது மனதில் தோன்றிய கேள்வியை தம்முடன் உணவு உட்கொள்ளும் தாய்மார்களிடம் கேட்டார். ஈராயிரம் ஆண்டுகளுக்கு வாழ்ந்த நாசரேத்தூர் திருக்குடும்பம், இன்றையக் காலக்கட்டத்திற்குப் பொருந்துமா?

அதற்கு அந்த கடை முதலாளியம்மா கூறினார்: 'யோசப்பு, மரியாள், இயேசு கொண்ட குடும்பத்தை, திருக்குடும்பம் என என்னால் கூற இயலாது, ஆனால் எனது தேவையின் போது அவர்களை நாடுவேன் ஏனெனில் என் சூழ்நிலைக்கு அவர்கள் பொருத்தமானவர்களாக இருக்கின்றனர். அப்படி பார்த்தால், எனது குடும்ப வாழ்க்கைக்கு அவர்கள் தேவையானவர்கள், பொருத்தமானவர்கள். எனது மாமியாருடன் எனக்குப் பிரச்னையும் சிக்கலும் உண்டு, என்னால் தாங்க முடியாத சமயத்தில், இயேசுவிடமும் தாய் மரியாளிடமும் செல்லுவேன்' .

இதெல்லாம் கடவுளின் திட்டமா? பெரும்பாலான குடும்பங்களில் கணவன்-மனைவி, மருமகள்-மாமியார், பெற்றோர்-பிள்ளைகள் பிரச்னைகள் நிலவுகின்றன. நமது மனிதப் பலவீனத்தால் இவற்றை தனியாக மேற்கொள்ள முடியாது என்பது ஆண்டவருக்குத் தெரியும். ஆகவே அவர் குழந்தையாக வந்தார். புனித யோசப்பையும் கன்னிமரியாளையும் தமது பெற்றோராக அவர் தேர்ந்து கொண்டு, தமது மீட்புத் திட்டத்தைச் செயல்படுத்தினார். இதன் வழி அவர், குடும்பத்தைப் புனிதப்படுத்தி, தூயதாக்கினார். நம்பிக்கையோடு வேண்டுவோருக்கு தெய்வீக அருளால் குடும்பங்களை ஆண்டவர் திருமொழிவு செய்கிறார். குடும்பத்தின் அழைப்பை அவர் வெளிபடுத்தியுள்ளார். எனவே திரு அவையிலும் உலகத்திலும் கிறிஸ்துவின் மறைதூதுப் பணியை நமது குடும்பத்திலிருந்து தொடங்குவதற்கு நாம் அனைவரும் திருமொழிவு செய்யப்பட்டுள்ளோம்.

கொலோசையருக்கு எழுதிய கடிதத்தில், புனித பவுல் குடும்பங்களுக்குக் கற்பிக்கிறார்; பரிவிரக்கம், நல்லெண்ணம், மனத்தாழ்மை, கனிவு, பொறுமை...(கொண்டு) ஒருவரை ஒருவர் பொறுத்துக் கொள்ளுங்கள், ஆண்டவர் உங்களை மன்னித்தது போல'. மனைவிமார்கள் தாய் மரியாளிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும். 'கனவு காணும் புனித யோசப்பு, தமக்குக் கொடுத்தப் பணியை நிறைவேற்றினார். கடவுளின் வாக்குறுதியை ஏற்றுக்கொண்டு அமைதியாக முன்னோக்கிச் சென்றார்' என திருத்தந்தை பிரான்சிஸ் கூறுகிறார். கணவன்மார்கள் புனித யோசப்பிடமிருந்து நிறையக் கற்றுக்கொள்ள முடியும். முதல் வாசகம் (சீராக் 3:2-6,12-14) இருந்து பிள்ளைகள் தங்களுக்குரிமைய கடமைகளை அறிந்து கொள்ளலாம்.

நாசரேத்தூர் திருக்குடும்பத்தைப் பின்பற்றி நடக்க எல்லா முயற்சியையும் மேற்கொள்வோம். உடலுக்கும் ஆன்மாவிற்கும் இடையிலான இடைவெளியை இறையருள் குறைக்கும் என உறுதிகொள்வோம். நம்மால் இயன்ற அனைத்தையும் செய்வோம், எஞ்சியதை ஆண்டவரிடம் விட்டுவிடுவோம். †

> **திருக்குடும்பம், எண்ணற்ற இதரத் திருக்குடும்பங்களின் தொடக்கமே.**
>
> - புனித 2ம் யோவான் பவுல்

**வாரம் ஒரு வசனம்**

தெய்வீக அருளால் குடும்பங்களை ஆண்டவர் திருமொழிவு செய்கிறார்.

INTERNAL CIRCULATION ONLY
BUL52/2018

Published by: Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

Print: Stenoprint Sdn Bhd
Design: The Mustard Seed Studio



**மினவுதல் மாதா தேவாலயம்**
85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ

*2018 ஆம் ஆண்டின் கருப்பொருள்*
***எதிர் நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்.***
*2018 டிசம்பர் (மார்கழி) மாதத்தின் கருப்பொருள்:*
***கிறிஸ்துவே இன்றியமையாத பரிசு (கொடை)***
**மினவுதல் தேவாலயத்தின் 170 ஆம் ஆண்டை நோக்கிய பயணம்**
**(1848 - 2018)**

**பங்கு அலுவலக நேரம்**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்:** கிறிஸ்து பிறப்புக்காலம் - திரு குடும்ப விழா **சனி 29-12-2018 - ஞாயிறு 06-01-2019**
1 சாமு : 1: 20-22, 24-28 தி.பா: 84: 1-2, 4-5, 8-9 1 யோவான்: 3: 1-2, 21-24 லூக்கா: 12: 41-52
**"ஆண்டவரே உமது இல்லத்தில் தங்கியிருப்போர் பேறுபெற்றோர்" - திபா 83**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 29 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை / நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(குடும்ப வாழ்வுப் பணிக்குழு) | |
| ஞாயிறு | 30 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பக | திருப்பலி (த) (இளைஞர்கள் )<br>திருப்பலி (ஆ) (குடும்ப வாழ்வுப் பணிக்குழு)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தேமொழி) | **மறைக்கல்வி வகுப்புகள் நடைபெறாது (பள்ளி விடுமுறை) 2019 ஆம் ஆண்டிற்கான பதிவுகள் ஜனவரி (தை) 6 ஆம் திகதி நடைபெறும்**<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ ) **வகுப்புகள் நடைபெறாது** |
| திங்கள் | 31 | **புத்தாண்டு நள்ளிரவு திருப்பலி :** நான் கு மொழி திருப்பலி இரவு 8.00 மணி தொடர்ந்து நள்ளிரவு வரை அமைதியில் செபித்தல் | | |
| செவ் | 01 | **புத்தாண்டு திருப்பலி :** காலை 7.00 மணி (தமிழ்) காலை 9.00 மணி (ஆங்கிலம்) காலை 11.00 மணி (சீனம்) பகல் 1.00 மணி (தேமொழி) மாலை 4.30 மணி (சீ) தித்தி | | |
| புதன் | 02 | 6.45 கா | திருப்பலி | |
| வியா | 03 | 6.45 கா | திருப்பலி | |
| வெள் | 04 | காலை திருப்பலி நடைபெறாது | ***மாலை 7.30 மணி திருமணி ஆராதனையும் திருப்பலியும் (ஆ) முதல் வெள்ளிக்கிழமை*** | |

**ஆண்டவரின் திருக்காட்சி**
எசாயா : 60: 1-6, 24-28 தி.பா: 71: 1-2, 7-8, 10-11, 12-13 எபேசியர்: 3: 2-3, 5-6 மத்தேயு : 2: 1-12
**"ஆண்டவரே எல்லா இனத்தவரும் உமக்கு ஊழியம் செய்வார்கள்" - திபா 83**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 05 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை / நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(புனித பெனடின் 2) | |
| ஞாயிறு | 06 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பக | திருப்பலி (த) (திருவழிபாட்டுக் குழு)<br>திருப்பலி (ஆ) (புனித பெனடின் 3)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தேமொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம்) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

## *2018 டிசம்பர் (மார்கழி) மாத செய்திகள் / நிகழ்வுகள்*

1) பங்கு காணிக்கை:
அ) 22/23 டிசம்பர் 2018 ரிம: 10,636.15
ஆ) கிறிஸ்மஸ் திருவிழிப்பு 24/12/18 ரிம:19,902.45
இ) கிறிஸ்மஸ் தினம் 25/12/18 ரிம:10,378.15
ஈ) தித்தி 23/12 & 24/12 - ரிம: 426.85

இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாக வழி நடத்துவாராக!

**2)திருவழிபாட்டுப் பொருட்கள் விற்பனை**
அ) 2019 திருவழிபாட்டு நாட்காட்டி (ஆ) ரிம: 6.00
ஆ) 2019 திருவழிபாட்டு நாட்காட்டி (த) ரிம: 6.00
இ) 2019 திருவழிபாட்டு நாட்குறிப்பு (த/ஆ) ரிம:20.00

**3) 2019 அதிச திருப்பலி வழிநடத்தும் பெயர்ப்பட்டியல் தயாராய் உள்ளது. பங்கு அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.**

- **ஆலய வளாகம் மற்றும் கழிவறை சுத்தத்தை பராமரித்தல்**; கழிவறைகளை பயன்படுத்தியபின் சுத்தமாக இருப்பதை உறுதி செய்துகொள்ளுங்கள். டிஷ்யு பேப்பர், குழந்தைகள் மற்றும் பெண்கள் பயன்படுத்தும் நாப்கின் அனைத்தையும் அதற்குரிய இடத்தில் போடுமாறு கேட்டுக்கொள்கிறோம். ஆலயத்தையும் வளாகத்தையும் மற்றும் இருக்கைகள் அருகிலும் அசுத்தம் செய்யாதீர்கள். நன்றி.
- **ஆலய சீரமைப்பு மற்றும் மேம்பாட்டுக்காக உங்களிடமிருந்து நிதியை வரவேற்கிறோம்.** உங்களுடைய காசோலைகளை Church of Visitation பெயரில் எழுதவும். உங்களுடைய ஆதரவுக்கு நன்றி

**திருமண அருளடையாளக் கொண்டாட்டம்**
டேனியல் மோகன் & ஸ்டெபஃனி மெக்டலின் -
**05-01-2019 பகல் 3.30**

இன்று திருப்பலியை வழி நடத்திய திருவழிபாட்டுக் குழுவினருக்கு நமது நன்றிகள்

- **பினாங்கு குரு மட மாணவர் சகோதரர் பிலிப் ஆசீர்வாதம்** அவர்கள்(2ஆம் ஆண்டு தத்துவவியல்) மேய்ப்புப்பணி அனுபவத்திற்காக ஒரு மாதம் நம் பங்கில் தங்கியிருப்பார். அவருக்கு நம்முடைய ஆதரவை வழங்குவோம்.(ஜனவரி 3 - பிப்ரவரி 3, 2019 வரை)
- **ஞாயிறு மறைக்கல்வி வகுப்புகள்** ஜனவரி 6,2019 முதல் தொடங்குகிறது. பதிவுகள் அந்தந்த வகுப்புகளில் நடைபெறும்.
- **வகுப்பறைகளில் உள்ள மேசை நாற்காலிகளை** அங்கிருந்து அப்புறப்படுத்தவேண்டாம். சேதமாக்காமல் நல்ல முறையில் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- **குருவானவராக அல்லது துறவற சபையில் சேரும் எண்ணம் உள்ளதா?** இதைப் பற்றி மேலும் கலந்துரையாட பங்கு குருக்கள் அருட்திரு ஜோர்ஜ் மற்றும், சேவியர் இவர்களோடு பேசலாம் நாள்:12-01-2019 நேரம் காலை 9.00 மணி
- தூதுரைப்பணியின் கீழ் **இன்றைய தூதுரைப்பணியின் சீடர்கள்** என்ற கருப்பொருளில் உருவாக்கப் பயிற்சி: வழங்குபவர்: ஜூன் அந்தோன்(கோலாலம்பூர்) நாள்:21-01-2019 (திங்கள்-தைப்பூசம் பொதுவிடுமுறை) உருவாக்கப் பணிக்குழு மற்றும் தூய ஆவி அருங்கொடைப் பணிக்குழுவினர் இணைந்து இதை ஏற்பாடு செய்கின்றனர். கட்டணம்: ரிம;10/-
- **2019 ஆம் ஆண்டின் திருமணம் புரிய திட்டம் இருப்போரின் கவனத்திற்கு**:.(திருமணத்திற்கு ஒரு ஆண்டுக்கு முன்) முதலில் விண்ணப்ப படிவங்களைப் பூர்த்தி செய்யுங்கள். அதன்பின் பங்கு குருவானவரைச் சந்திக்க முன்பதிவு செய்து கொள்ளுங்கள். திருமண தயாரிப்புப் பயிற்சிகள் தொடங்கவுள்ளது

- 10-01-2019 (வியாழன்) : **நெகிரி மேய்ப்புப்பணி கூட்டம்** - மினவுதல் தேவாலயம், மாலை7.00
- 14-17 ஜனவரி **குருக்களின் ஆண்டு மேய்ப்புப்பணி மாநாடு (CAPA)** ஈப்போ
- 19 & 20 ஜனவரி **பொங்கல் திருநாள்**
- 23 -01-2019 (புதன்): **அதிச ஒருங்கிணைப்புக்குழு கூட்டம்** இரவு 8.00 தேவாலய மண்டபம்
- 25-01-2019(வெள்ளி) **கிறிஸ்துவ ஒற்றுமை வாரம்** - செப வழிபாடு - மெத்தோடிஸ்ட் ஆலயம், சிரம்பான். இரவு 8.00 மணி
- 27-01-2019 (ஞாயிறு) மாலை 5 மணிக்கு **புனித வனத்து சின்னப்பர் திருவிழா,** ரஹாங் சிற்றாலயம் நற்கருணை ஆராதனை / திருப்பலி / ஒன்றுகூடல்
- 27-01-2019 (ஞாயிறு) **மறைக்கல்வி ஞாயிறு**

பங்கு குருக்கள் அருட்திரு ஜோர்ஜ் மற்றும் சேவியர் இருவரும் பங்கு மக்கள் அனைவருக்கும் குறிப்பாக திருவருகைக் காலம் மற்றும் கிறிஸமஸ் கொண்டாட்டத்தின் போது திருவழிபாட்டு தயாரிப்புகளைச் செய்த திருவழிபாட்டு குழுவினருக்கும் தங்களின் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர். இறைவன் உங்களை நிறைவாய் ஆசீர்வதிப்பாராக.

**அனைவருக்கும் 2019 புத்தாண்டு நல் வாழ்த்துகள்**